திண்டுக்கல் மாவட்டத்தில் - தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப்

# பயனாளிகளுக்கு கூடுதலாக ரூ.200 கோடி வழங்கப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்!



திண்டுக்கல், அக். 14 - திண்டுக்கல் மாவட்டத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் பயனாளிகளுக்கு 71லட்சத்து 74ஆயிரத்து 916 மனித சக்தி நாட்கள் கூடுதலாக வழங்கிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பயனாளிகள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் பயனாளிகளுக்கு 71லட்சத்து 74ஆயிரத்து 916 மனித சக்தி நாட்கள் கூடுதலாக வழங்கிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு 100நாள் வேலைதிட்ட பயனாளிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர். திராவிட மாடல் ஆட்சியில் திண்டுக்கல் மாவட்டத்தில்; 2023-24ம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயனாளிகளுக்கு ரூ.200கோடி கூடுதலாக வழங்கப்பட உள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தின் போது முடக்கப்பட்டு வந்தது. பயனாளிகள் பலருக்கு முறையாக வேலை வழங்காமல் இழுத்தடித்து வந்தனர். தற்போது கடந்த 2வருடங்களாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊராட்சிகளில் 100 நாள் வேலைதிட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தமிழக அரசு 100நாள் வேலை திட்ட பயனாளிகள் வாழ்வாதாரத்தை காப்பாற்ற பல்வேறு நடவடிக்கையை எடுத்து வருகிறது. குறிப்பாக கிராமப்புரங்களில் 100 நாள் வேலை திட்டம் மூலம் வடிகால்வசதி, சமுதாயகூடம், சிமென்ட் சாலைகள், தடுப்பணைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதால் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு கூடுதலாக பணிநாட்கள் கிடைத்து வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில் செப்டம்பர் மாதம் வரை 48,94,325 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்ட பயனாளிகள் பயனடைந்தனர். தற்போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பொறுப்பேற்றவுடன் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தால் உள்ளது என தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதால் தமிழக முதல்வரின் உத்தரவுப்படி 2023-24ம் நிதியாண்டில் செப்டம்பம் மாதம் வரை 1,20,69,241 மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டைவிட 71லட்சத்து 74ஆயிரத்து 916 கூடுதலாக மனித சக்தி நாட்கள் கிடைத்துள்ளது. இதுபோல கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில் செப்டம்பர் மாதம் வரை 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு ஊதியமாக ரூ.114, கோடியே 76லட்சத்து 91ஆயிரம் வழங்கப்பட்டது. தற்போது 2023-24 செப்டம்பம் மாதம் வரை ரூ.316கோடியே 64இலட்சத்து 36ஆயிரம் வரை வழங்கப்பட உள்ளது. கடந்த ஆண்டைவிட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயனாளிகளுக்கு ரூ.201 கோடியே 87லட்சத்து 45ஆயிரம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

இதன்மூலம்திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயனாளிகளுக்கு தடையில்லாமல் பணிநாட்கள் கிடைக்கிறது என்றார்.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் கூறுகையில் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வண்ணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களும் நடவடிக்கை எடுத்துவருவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என பாராட்டு தெரிவித்தனர்இது குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி அவர்கள் கூறுகையில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக இருந்த நம் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையை சீர் மிகு துறை யாக மாற்றினார் அப்போது தி ண்டுக்கல் மாவட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகளில் முதலிடம் பிடித்து மத்திய அரசின் விருதும் பெற்றது திண்டுக்கல் மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு அன்றும் இன்றும் உறுதுணையாக இருப்பது தி.மு.க. அரசு தான் என்றார்.

ரூ.608 கோடி நிதி உதவி பெற்ற குஜராத்துக்கு 0 பதக்கம்!

# ரூ.33 கோடி மட்டும் பெற்ற தமிழ்நாட்டிற்கு 17 பதக்கங்கள்!

## மோடி அரசின் பாரபட்சம் வெட்ட வெளிச்சம்!

புதுடெல்லி, அக். 14 - சீனாவின் ஹாங்சோ நகரில் நடை பெற்ற 19ஆவது ஆசிய விளை யாட்டுப் போட்டியில் இந்தியா இது வரை இல்லாத வகையில் 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என 107 பதக்கங்களை வென்று வரலாறு படைத்தது. மாநில வாரியாக அதிகபட்சமாக ஹரியானா 44 பதக்கங்களும், பஞ்சாப் 32 பதக் கங்களும், மகாராஷ்டிரா 31 பதக்கங்களும், உத்தரப்பிரதேசம் 21 பதக்கங் களும், தமிழ்நாடு 17 பதக்கங்களும், மேற்கு வங்கம் 13 பதக்கங்களும், ராஜஸ்தான் 13 பதக்கங்களும், மிசோரம் ஒரு பதக்கமும் வென்றுள்ளன.

இதில், குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால், 'கேலோ இந்தியா' திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் விளை யாட்டுத் துறை பட்ஜெட்டில், மிக குறைவான நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற மாநிலங்களே, ஆசிய விளை யாட்டுப் போட்டியில் பதக்க வேட்டை நடத்தி யுள்ளன.

மாறாக, நாட்டிலேயே மிக அதிக மான நிதி ஒதுக்கீட்டை பெற்ற குஜராத் மாநிலம் ஒரு பதக்கம் வெல்ல முடியாமல் சோகத்துடன் திரும்பியுள்ளது என்பதுதான்.

**குஜராத் ரூ.608 கோடி"0" பதக்கம்**

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் ஹரியானா ரூ. 88.89 கோடியும், பஞ்சாப் ரூ. 93.71 கோடியும், மகாராஷ்டிரா ரூ. 110.8 கோடியும், உத்தரப் பிரதேசம் ரூ. 503.02 கோடியும், தமிழ்நாடு ரூ. 33 கோடியும், மேற்கு வங்கம் ரூ. 26.77 கோடி யும், ராஜஸ்தான் ரூ. 112.26 கோடியும், மிசோரம் ரூ. 39 கோடியும், மோடியின் சொந்த மாநிலமான குஜராத் அதிகப் பட்சமாக ரூ. 608 கோடி நிதியை பெற்றுள்ளன.

இதில், மோடி அரசிடமிருந்து ரூ. 200 கோடிக்கும் குறைவான பட்ஜெட் ஒதுக்கீட்டைப் பெற்றுள்ள பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள்தான், இந்தியா வென்றுள்ள 107 பதக்கங்களில் 75 பதக்கங்களை பெற்றுத் தந்துள்ளன. வெறும் 33 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுள்ள தமிழ்நாடு மட்டும் தனியாக 17 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளது.

ஆனால் ரூ. 608 கோடி என பிரம்மாண்டமான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுள்ள குஜராத் மாநிலம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு பதக்கம் கூட வெல்லாமல் திரும்பியுள்ளது. மேற்குறிப்பிட்ட விஷயம் மாநிலங் களுக்கு இடையேயான போட்டி அல்ல. மாநில எல்லைகளின் அடிப்படையில் மக்களை பிரிப்பதற்காக அல்ல. மாறாக, பிரதமர் நரேந்திர மோடியும், ஒன்றிய பாஜக அரசும், இனி மேலாவது அனைத்து மாநிலங்களுக்கும் பார பட்சம் இல்லாமல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுதான். விளையாட்டி லும் தங்களுக்கு வேண்டிய மாநிலம் வேண்டாத மாநிலம் என்று பாகுபாடு பார்த்து நிதி ஒதுக்கீடு செய்வதைக் கைவிட வேண்டும் என்பதுதான்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதி போகலூர் வட்டாரம் உரத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் போகலூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர். கே கதிரவன், போகலூர் ஒன்றிய குழு துணை தலைவர் பூமிநாதன், உரத்தூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் காளிதாஸ் மற்றும் வட்டார மருத்துவ அலுவலர் பிரதீப்,மருத்துவ மேற்பார்வையாளர் கிருஷ்ணசாமி மற்றும் சுகாதார பணியாளர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!






சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கண்காட்சி மற்றும் இலக்கிய ஆய்வரங்கத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) தொடங்கி வைத்து, ஆய்வரங்கத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு கலைஞர் பற்றிய நூல்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ் இளங்கோவன், பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

விக்கிரம சிங்கபுரம் நகராட்சியில்

# நீர் வீழ்ச்சிகளுக்கு விதி விலக்கு அளிக்க முடியாது!

## சட்டப் பேரவையில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தகவல்!



சென்னை, அக். 14 - சட்டப் பேரவையில் அம்பா சமுத்திரம் தொகுதி உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அளித்த பதில் வருமாறு:

**டாக்டர் மா. மதிவேந்தன்:** பாபநாசம் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சோதனைச் சாவடிகள், களக்காடு முண்டந் துறை புலிகள் காப்பகத்தின் அறக்கட்டளை சார்பாக நுழைவுக் கட்டணமாக ரூபாய் 30 வசூலிக் கப்படுகிறது. குறிப்பாக, அகஸ்தியர் நீர்வீ ழ்ச்சிக்கு செல்லும் மக்களிடமிருந்து மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சொரிமுத்து அய்யனார் கோயிலுக்குச் செல்லும் பக்தர் களிடமிருந்து எந்தத் தொகையும் வசூலிக்கபடவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் பகுதியில் மட்டும் அகஸ்தியர் நீர்வீழ்ச்சி, மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி, தலையணை நீர்வீழ்ச்சி என்று 3 நீர்வீழ்ச்சிகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், 3 சோதனைச் சாவடிகள் உள்ளன. பாபநாசம், மணிமுத்தாறு தலையணை உள்ளிட்ட இடங்களில் 3 சோதனைச் சாவடிகளும் உள்ளன. இந்தச் சோதனைச் சாவடிகள் தமிழகம் முழுவதும் உள்ள சரணாலயங்கள் மற்றும் காப்பகங்களில் உள்ளன. புலிகள் காப்பகத்தின் அறக்கட்டளை சார்பாக சோதனைச் சாவடிகள்மூலம் ரூ.30 வசூலிக் கப்படுகிறது. மிக முக்கியமாக புலிகளை பாதுகாப்பதற்காகவும், புலிகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவதற்காகவும் அந்த நிதி பயன்படுத்தி உபயோகப்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்லாமல், உள்ளூர் வாசிகளைப் பொறுத்த வரையில், விக்கிரமசிங்க ப்புரம் நகராட்சியில் உள்ள உள்ளூர்வாசிகள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை வரையறைப்படுத்துவது மிகவும் கடினமான சூழ்நிலையாக இருக்கிறது. ஓர் இடத்தில் நாம் விலக்களித்தால், அனைத்து இடங்களிலும் விலக்களிக்க வேண்டிய சூழ்நிலை வரும். வேறொரு மாவட்ட மக்கள் அல்லது வேறொரு ஒன்றிய மக்கள் எல்லோரும் கேட்கக்கூடிய சூழ்நிலை வரும். அதனால், உள்ளூர்வாசிகள் யார், சுற்றுலாப் பயணிகள் யார் என்பதை கண்டறிவதில் கடினமான சூழ்நிலையாக இருப்பதால் அந்தக் கட்டணம் கண்டிப்பாக வசூலிக் கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இசக்கி சுப்பையா:** அதாவது, விக்கிரம சிங்கபுரம் நகராட்சியில் உள்ள உள்ளூர்வாசிகள் ஆதார் அட்டை காண்பித்தாலே அவர்கள் உள்ளூர்வாசிகள் என்பது தெரிந்துவிடும். அதுவே போது மானது. அடுத்து, புலிகள் காப்பகத்திற்காக கொடுக்கப்பட்ட நிதி என்று நீங்கள் சொல்கிறீர்கள். உள்ளூர்வாசிகள் குறைந்தது ஒரு நாளைக்கு 100 பேர்தான் போவார்கள். 100x30 என்றாலுமே ரூ.3,000 தான் வரும். ஆகவே, தயவுகூர்ந்து அரசு நிச்சயமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மா.மதி வேந்தன்:** நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதுமாதிரி ஒவ்வொரு நீர்வீழ்ச்சிக்கும் நாம் விதி விலக்கு அளிக்க வேண்டிய சூழ்நிலை வரும். அதனால் தான் நாம் இப்போது கோயிலுக்கு செல்வதற்கு எந்த வசூலும் செய்வ தில்லை. நீர் வீழ்ச்சிக்கு விதிவிலக்கு அளிக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

# கழகத் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தீர்மானக் குழு செயலாளர்கள் அறிவிப்பு!

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கழக தீர்மானக்குழு சார்பாக மிகச்சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென ஏற்கனவே நடந்த கலந்தாலோசனைக் கூட்டங்களில் முடிவெடுக்கப்பட்டது.

கழக தீர்மானக்குழு சார்பாக வரும் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னையில் நடத்தப்படும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற கழக இளைஞர் அணிச் செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இசைவு தந்துள்ளார்.

அந்த விழாவினைச் சிறப்புற நடத்திடுவது பற்றிய தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வரும் 17.10.2023 செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்மானக்குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில், சென்னை அண்ணா அறிவாலய அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் மாநில தீர்மானக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மீ.அ.வைத்தியலிங்கம்** **கீரை.விஸ்வநாதன்** **அக்ரி.கே.பி.டி.கணேசன்**

மாநில தீர்மானக்குழு செயலாளர்கள்

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு


சேலம் கிழக்கு மாவட்டம், சேலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் **டி.மாணிக்கம்** அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை இன்று முதல் ரத்து செய்யப்பட்டு, சேலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்**
**அக்டோபர் 14 (1992)**



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**